[1979 மார்ச் 20

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : துணைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணை விளக்கு எரிப்பதற்காகவும் பயன் படுத்தப்படுகிறது, எருபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது, என்பதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, இதிலே ஏழைகள், பணக்காரர்கள் என்று பார்ப்பதற்கு நியாயம் இல்லை. யார் யார் விள்க்கு எரிப்பதற்காக பயன்படுத்துகிறார்களோ அவர்களும் பயன்படுத்தவேண்டும். அதைப்போலவே எரிபொருளாகப் பயன் படுத்துவதற்கும் மண்ணெண்ணை கிடைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை வாணிபக் கழகம் எடுத்துக் கொண்டு இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனிடம் ஒப்படைக் கப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அவர்கள் வாங்கியதற்குப் பிறகு சில்லரை வியாபாரிகளிடம் கொடுப்பதற்குப் பதிலாக, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கும் கிராமங்களிலே கூட்டுறவுச் சங்களு களிலே ஒப்படைப்பதற்கும் அதன் மூலம் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கும் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்து, பிறகு சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக வாணிபக் கழகத்திடம் கொடுக்கவேண்டுமென்று அவர் கள் சொல்வதைவிட மத்திய அரசு இண்டியன் ஆயில் கார்ப்ப ரேஷன் மூலம் டீலர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக மாநில அரசுக்கு வாணிபக் கழகத்திற்கு கொடுப்பார்களா என்று கேட்டு இருப்பார்களானால் பொறுத்தமாகவும் இருக்கும், பாராட்டுக் குரியதாகவும் இருந்திருக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(2) தகவல் கோரல்—தொடர்ச்சி

(2) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்

திரு. து. புருஷோத்தமன் : சார், சென்னையிலே தியாகராய நகரிலே

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். 41 அல்லது 42வது விதிகளின்கீழ் கொடுத்தவைகள் என்ன ஆயிற்று என்பதைத் தவிர வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். அவைகள் எல்லாம் ஆய்விலே இருக்கும்.

1979 மார்ச் 20] [பேரவைத் துணைத் தலைவர்]

இந்த இரண்டையும் தவிர வேறு ஏதாவது ஒழுங்குப் பிரச்னை இருந்தால் எழுப்ப வேண்டுமே தவிர, ஒவ்வொருவரும் கொடுத்ததைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தால் வேறு அலுவல்களுக்கு எப்பொழுது போவது, எப்படி நடத்துவது ? (குறுக்கீடு) (திரு. ரா. கிருஷ்ணன், திரு. துரை கலியமூர்த்தி ஆகியவர்கள் எழுந்தார்கள்). உறுப்பினர்கள் அனைவரும் தயவு செய்து உட்கார வேண்டும். இப்பொழுது மணி 11-30 ஆகப்போகிறது. நீங்கள் கொடுத்தது இன்றைக்கு வரவில்லை என்றால், நாளைக்கு, நாளை மறுநாள் என்று வரும். எனவே, உட்காருங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : நான் சொல்வது வேறு விஷயம்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம். திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசியதை நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதை அனுமதிக்க முடியாது.

(3) அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1979–80–ஆம் ஆண்டின் செலவிற்கான முன் பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1979– 80 as detailed in the annexure enclosed."

(முற்பகல் 11-30)

(6) 1979–80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, 1979–80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.